(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 69.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2023 நவம்பர் 07 செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** கைத்தொழில் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ ரொசான் ரணசிங்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். யூ. எம். அலி சப்ரி,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) டயனா கமகே,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டி.வீ. சானக,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசநாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சர் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா

கௌரவ கபில அதுகோரல

கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல

கௌரவ சம்பத் அதுகோரல

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ வஜிர அபேவர்தன

கௌரவ அஸோக அபேசிங்ஹ

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ தவராஜா கலை அரசன்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ திஸகுட்டி ஆரச்சி

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ சு. நோகராதலிங்கம்

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ உத்திக பிரேமரத்ன

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ சட்டத்தரணி எஸ். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ நிபுண ரணவக

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ வருண லியனகே

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ஜகத் சமரவிக்ரம**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ சட்டத்தரணி டப்ளியூ. டீ.ஜே. செனவிரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ ஏ.எச்.எம். பௌஸி**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. சமிந்த குலரத்ன, பதில் பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *சனாதிபதியின் செய்திகள்:*** சனாதிபதியிடமிருந்து கிடைத்த பின்வரும் செய்தியை பிரதிச் சபாநாயகர் வாசித்தார்:—

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/4/5/1

2023 ஒக்தோபர் மாதம் 21 ஆந் திகதி

**மாண்புமிகு மஹிந்த யாப்பா அபேவர்த்தன அவர்கள்**
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, மக்களிடையே அமைதியைப் பேணுவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, முதலாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்படும் ஆயுதந்தாங்கிய படையின் சகல உறுப்பினர்களும் அதன் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்பட்ட பிரதேசங்களில் மக்களிடையே அமைதியைப் பேணுவதற்காக அழைக்கப்படுகின்றனர் என ஆணையிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேற்படி கட்டளைச் சட்டத்தின் 21(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(3) பிரிவுக்கமைய அதனை இத்தால் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கின்றேன்.

இங்ஙனம் - அன்புள்ள

**ரணில் விக்கிரமசிங்க**
சனாதிபதி

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

**2. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** பிரதிச் சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

“உயர்நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட ‘பயங்கரவாத எதிர்ப்பு’ என தலைப்பிடப்பட்ட சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினைப் பாராளுமன்றத்துக் அறிவிக்க விரும்புகின்றேன்.

‘‘பயங்கரவாத எதிர்ப்பு’’ எனும் சட்டமூலமானது 2023 ஒக்டோபர் 03 ஆம் திகதிய பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படாதமையால் குறிப்பிட்ட சட்டமூலத்தின் அரசியலமைப்பு சார் செல்லுபடித்தன்மை தொடர்பாக அரசியலமைப்பின் 121(3) உறுப்புரையின் பிரகாரம் தீர்ப்பளிப்பதற்கு உயர் நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கம் இல்லை என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது, ஆகையால், அனைத்து பத்து மனுக்கள் தொடர்பான வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.”

**II**

‘‘அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் “சேர்பெறுமதி வரி (திருத்தம்)’ எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனு மீதான உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

மேற்படி சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை நீக்கிக் கொள்வதாக மனுதாரர்கள் வேண்டிய கோரிக்கைகக்கு ஏற்ப மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன என உயர்நீதிமன்றத்தினால் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.’’

**III**

‘‘அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் “நிகழ்நிலைக் காப்பு” எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனு மீதான உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

சட்டமூலத்தின் அரசியலமைப்பு சார் செல்லுபடித்தன்மை தொடர்பில், உயர் நீதிமன்றம் பின்வரும் தீர்மானங்களை வழங்கியுள்ளது:-

வாசகங்கள் 3, 5, 7, 9, 11, 12, 13, 14, 15, 16, 17, 18,19, 20, 21, 22, 23, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 36, 37, 42, 45, 53 மற்றும் 56 ஆகியன அரசியலமைப்பின் உறுப்புரை 84(2) இன் பிரகாரம் பாராளுமன்றத்தினால் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட வேண்டும்.

எனினும், 3, 5, 7, 9, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 36, 37, 42, 45, 53 மற்றும் 56 ஆகியன மேற்படி பல வாசகங்களுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பின்படி சட்டமூலத்தின் குழுநிலையில் பாராளுமன்றத்தில் திருத்தப்பட வேண்டுமெனும் நிபந்தனையின் அடிப்படையில் இச்சட்டமூலம் பாராளுமன்றத்தினால் எளிய பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட முடியும்.

மேற்குறிப்படப்பட்டவற்றிற்கு உட்படுமாயின், சட்டமூலத்தின் எந்தவொரு ஏற்பாடும் அரசியலமைப்புடன் ஒவ்வாததாகவிராது என்ற கருத்தினை உயர் நீதிமன்றம் கொண்டுள்ளது. ஆகையால், தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு சட்டமூலமானது எளிய பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்படலாம்.

உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்."

**IV**

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2023 நவெம்பர் 01 ஆம் திகதி 'பலப்பிட்டிய ஸ்ரீ ராஹுலாராம புராண விஹாரஸ்த்த சாமனேர ஆகல்ப சங்வர்தன பிக்ஷு கல்லூரி (கூட்டிணைத்தல்)' மற்றும் 'சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளித்தல்' எனும் சட்டமூலங்களில் கௌரவ சபாநாயகரால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்."

**V**

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'தேசிய நீரளவை' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று மனுக்களின் பிரதிகள் கௌரவ சபாநாயகருக்கு கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்."

**VI**

"பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார் அவர்கள் 2023 ஒக்டோபர் 03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை விடயம் தொடர்பில் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துவதற்கான பிரேரணையொன்று கொண்டு வரப்படலாம். "

**VII**

"பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி அவர்கள் 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை விடயம் தொடர்பில் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துவதற்கான பிரேரணையொன்று கொண்டு வரப்படலாம்."

**VIII**

"பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக கௌரவ சபாநாயகர் அவர்களால் நியமிக்கப்பட்ட பாராளுமன்றக் குழுவில் பணியாற்றுவதற்கு கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல அவர்களும் கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல அவர்களும் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறியத்தருகின்றேன். "

**3. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1 ) பிரதிச் சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் -

(i) 2015 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் ஒன்பதாவது தொகுதியின் XVIII ஆம் பகுதியையும் ;

(ii) 2019 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் LII ஆம் பகுதியையும் ;

(iii) 2021 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XLIII ஆம் பகுதியையும் மற்றும் ஒன்பதாவது தொகுதியின் XXXIII பகுதியையும்; மற்றும்

(iv) 2022 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XX, XXI மற்றும் XXII ஆம் பகுதிகளையும், மூன்றாவது தொகுதியின் XI மற்றும் XII ஆம் பகுதிகளையும் மற்றும் ஒன்பதாவது தொகுதியின் IX மற்றும் X ஆம் பகுதிகளையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) பிரதிச் சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம், 2022 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் முதலாவது தொகுதியின் XXI, XXII, XXIII, XXIV மற்றும் XXV ஆம் பகுதிகள், நான்காம் தொகுதியின் VII மற்றும் VIII ஆம் பகுதிகள், ஐந்தாம் தொகுதியின் VI மற்றும் VII ஆம் பகுதிகள் மற்றும் ஆறாம் தொகுதியின் VI, VII மற்றும் VIII ஆம் பகுதிகளையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(3) பிரதிச் சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் –

(i) சிறைச்சாலைகளில் காணப்படுகின்ற இட நெருக்கடியை முகாமைத்துவம் செய்தல் தொடர்பான செயலாற்றல் கணக்காய்வு தொடர்பான அறிக்கையின் எட்டாவது தொகுதியின் - III ஆம் பகுதி; மற்றும்

(ii) 2020 ஜனவரி 01 தொடக்கம் 2022 மே 31 வரையான காலப்பகுதியினுள் தேசிய பாடசாலைகளில் இடைநிலை தரங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கையின் பத்தாவது தொகுதியின் - IV ஆம் பகுதி

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(4) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஒக்டோபர் 09 ஆம் திகதிய 2353/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்து அவ்வொழுங்குவிதிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் 2023.09.01 முதல் 2023.09.30 வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாடுகள் பொறுப்புக் கருத்திட்டத்தின் மூலம் செய்யப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பினைச் சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரம் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(6) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகளை சமர்ப்பித்து அவ்வறிக்கை கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான கட்டிடத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்—

(i) 2022 ஆம் ஆண்டுக்கான ஜய கன்டேனர் டர்மினல்ஸ் லிமிடெட்டின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) சுற்றாடல் அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய உணவு ஊக்குவிப்புச் சபையின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாயம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 13(1)(அ) மற்றும் 13(1)(ஆ) ஆம் பிரிவுகளின் கீழ் ஆய வரி தொடர்பில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 யூலை 04 ஆம் திகதிய 2339/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை சமர்ப்பித்து அவ்வறிக்கை அக்கட்டளை உரிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(12) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(13) புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(14) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தொழில் மற்றும் வெளிநாட்டுத் வேலைவாய்ப்பு அமைச்சின் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(15) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான தொழில் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை வெளிநாட்டுத் தொழில்கள் மற்றும் உழைப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(16) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், வழிவகைகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 124(6) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை வழிவகைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(17) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4 பாராளுமன்ற நிலையியற் கட்டளை 52(6) இன் கீழ் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்:** ""தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவ (கூட்டிணைத்தல்)" எனும் சட்டமூலம் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 52(6) இன் கீழ் அறிக்கையை புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சமர்ப்பித்தார்.

சட்டமூலம் 2023 நவம்பர் 08 ஆம் திகதி புதன்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக எனக் கட்டளையிடப்பட்டது.

**5. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(i) ஹோமாகம, பொரளை வீதி, கொடகம, சித்துமின மாவத்தை, இல. 217/2 இல் வதியும் திரு. சீ.டப்ளியூ. லியனகேயினது 2023.08.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) கொழும்பு 05, நாரஹேன்பிட்ட, கிருள வீதி, இல. 265 இல் வதியும் திருமதி எஸ்.எம். பண்டாரவினது 2023.09.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) வாத்துவ, தல்பிட்டிய தெற்கு, இல. 17/25 இல் வதியும் திரு. சிசிர குமார ஜயவர்தனவினது 2023.05.29 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ விஜித ஹேரத் சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**6. மத்தியஸ்தத்திலிருந்து விளைகின்ற சர்வதேச தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகளை ஏற்றங்கீகரித்தலும் மற்றும் வலுவுறுத்தலும்:** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம் — மத்தியஸ்தம் மீதான சிங்கப்பூர் சமவாயம் எனவறியப்படும் மத்தியஸ்தத்திலிருந்து விளைகின்ற சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகளின்மீது ஐக்கிய நாடுகள் சமவாயத்துக்குப் பயன்கொடுப்பதற்கும்; சர்வதேச தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகளை ஏற்றங்கீகரிப்பதற்கும் வலுவுறுத்துவதற்கும் ஏற்பாடுகளைச் செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2023 நவம்பர் 21 ஆம் திகதி புதன்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் நியாயமான, சட்டத்தை மதிக்கும் சமூகமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**7. தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்று பிரதிச் சபாநாயகரால் 53(3) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**8. கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக"என கடற்றொழில் அமைச்சர் பிரேரித்தார்.

(பி. ப. 1.00 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ இம்ரான் மஹ்ரூப் தலைமை தாங்குவாராக" என கடற்றொழில் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.09 மணிக்கு கௌரவ இம்ரான் மஹ்ரூப் தலைமை தாங்கினார்.)

"கௌரவ ஜகத் சமரவிக்ரம தலைமை தாங்குவாராக" என நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.23 மணிக்கு கௌரவ ஜகத் சமரவிக்ரம தலைமை தாங்கினார்.)

(பி.ப. 4.39 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என கடற்றொழில் அமைச்சர் சார்பாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம்

2 ஆம் பக்கத்தில் 7 ஆம் மற்றும் 8 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கடற்றொழில் அமைச்சர் சார்பாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய எவரேனும் ஆள், அத்தகைய";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் பக்கத்தில் 11 ஆம் மற்றும் 12 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கடற்றொழில் அமைச்சர் சார்பாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"பட்டது எனவும் அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கான எல்லா உரிய விழிப்புக்கவனங்களையும் பிரயோகித்தார் எனவும் எண்பித்தால்,";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் வாசகம்

3 ஆம் பக்கத்தில் 5 ஆம் மற்றும் 6 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கடற்றொழில் அமைச்சர் சார்பாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய எவரேனும் ஆள், அத்தகைய";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் பக்கத்தில் 8 ஆம், 9 ஆம் மற்றும் 10 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கடற்றொழில் அமைச்சர் சார்பாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"பட்டது எனவும் அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கான எல்லா உரிய விழிப்புக்கவனங்களையும் பிரயோகித்தார் எனவும் எண்பித்தால்,";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 முதல் 6 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

7 ஆம் வாசகம்

7 ஆம் பக்கத்தில் 19 தொடக்கம் 33 வரையிலான வரிகளை ( இரண்டும் உட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கடற்றொழில் அமைச்சர் சார்பாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

" "சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத (சஅஒ) மீன்பிடித் தொழிற்பாடுகள்" என்பது—

சட்டவிரோதமான மீன்பிடித் தொழில் தொடர்பில், பின்வருவனவற்றினால் நடாத்தப்படும் மீன்பிடித்தொழிற்பாடுகள் எனப் பொருள்படும்-

(அ) ஏதேனும் சட்டத்தை அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறி இலங்கை நீர்ப்பரப்புகளில் உள்ள உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மீன்பிடிவள்ளங்களினால்;

(ஆ) இந்து சமுத்திர டியூனா ஆணைக்குழுவினால் அல்லது இலங்கை திறத்தவரொருவராகவுள்ள வேறு கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பேணிக்காத்தல் மற்றும் முகாமைத்துவ வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி உட்பட எவையேனும் சட்டங்களை அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறி ஆழ்கடலில் ஏதேனும் உள்நாட்டு மீன்பிடிவள்ளத்தினால்;

(இ) வேறு அரசின் அனுமதியின்றி அத்தகைய அரசின் நியாயாதிக்கத்தின்கீழ் உள்ள நீர்ப்பரப்புகளில் ஏதேனும் உள்நாட்டு மீன்பிடிவள்ளத்தினால்;

(ஈ) விடயத்துக்கேற்ப பின்வருவனவற்றை நடைமுறைப்படுத்தி இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை மீறி தொழிற்படும், இந்து சமுத்திர டியூனா ஆணைக்குழுவுக்கு அல்லது இலங்கையும் திறத்தவரொருவராகவுள்ள வேறு ஏதேனும் பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்கமைப்புக்கு திறத்தவரொருராகவுள்ள ஏதேனும் வெளிநாட்டு அரசின் கொடியை இலங்கை நீர்ப்பரப்புகளில் பறக்கவிடுகின்ற ஏதேனும் மீன்பிடிவள்ளத்தினால்-

(i) இந்து சமுத்திர டியூனா ஆணைக் குழுவின் அல்லது அத்தகைய வேறு பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பேணிக்காத்தல் மற்றும் முகாமைத்துவ வழிமுறைகள் அல்லது

(ii) இலங்கையினால் பொறுப்பேற்கப்பட்ட ஏதேனும் சர்வதேச உடன்படிக்கை அல்லது கடப்பாடுகளின் இயைபான ஏற்பாடுகள்;

அறிக்கையிடப்படாத மீன்பிடித்தொழில் தொடர்பில்-

விடயத்துக்கேற்ப, இந்து சமுத்திர டியூனா ஆணைக்குழுவின் அல்லது வேறு ஏதேனும் பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்கமைப்பின் தகுதி இடப்பரப்பில் அல்லது அத்தகைய வேறு இடப்பரப்பில், இந்து சமுத்திர டியூனா ஆணைக்குழுவின் அல்லது இலங்கை திறத்தவரொருவராகவுள்ள வேறு ஏதேனும் பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்கமைப்பின் எவையேனும் அறிக்கையிடும் நடவடிக்கைமுறைகளை அல்லது இலங்கையினால் பொறுப்பேற்கப்பட்ட ஏதேனும் சர்வதேச உடன்படிக்கையின் அல்லது கடப்பாடுகளின் இயைபான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தி இச்சட்டத்தின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்படக்கூடிய ஏதேனும் ஒழுங்குவிதி உட்பட்ட இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியின்கீழ் விதித்துரைக்கப்பட்ட அறிக்கையிடும் நடவடிக்கைமுறைகளை மீறி பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிராத அல்லது பிறழ் அறிக்கையிடப்பட்டுள்ள,

மீன்பிடித்தொழிற்பாடுகள் எனப்பொருள்படும்;

ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தொழில் தொடர்பில்-

(அ) இந்து சமுத்திர டியµனா ஆணைக்குழுவின் அல்லது இலங்கை திறத்தவரொருவராகவுள்ள வேறு ஏதேனும் பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்கமைப்பின் தகுதி இடப்பரப்பில், இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினால் நடைமுறைப்படுத்தப்படும் இந்து சமுத்திர டியூனா ஆணைக்குழுவின் அல்லது அத்தகைய வேறு பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்கமைப்பின் பேணிக்காத்தல் மற்றும் முகாமைத்துவ வழிமுறைகளுடன் ஒத்திராத அல்லது அவற்றை மீறுகின்ற முறையொன்றில், நாட்டினம் இன்றி அல்லது இந்து சமுத்திர டியூனா ஆணைக்குழுவுக்கு அல்லது அத்தகைய வேறு பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்கமைப்புக்கு திறத்தவரொருவராகவிராத அரசொன்றின் கொடியை பறக்கவிடுகின்ற மீன்பிடி வள்ளமொன்றினால் நடாத்தப்படும்.

மீன்பிடித் தொழிற்பாடுகள் எனப் பொருள்படும்;

(ஆ) எந்த இடப்பரப்புகளில் அல்லது எந்த மீன்கையிருப்புகள் தொடர்பாக ஏற்புடையற்பாலனவான பேணிக்காத்தல் அல்லது முகாமைத்துவ வழிமுறைகள் இல்லனவோ மற்றும் அத்தகைய மீன்பிடிச் செயற்பாடுகள், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் தரப்பட்ட அளவுக்கு, சர்வதேச சட்டத்தின்கீழ் உயிருள்ள கடல்சார் வளங்களைப் பேணிக்காப்பதற்காக இலங்கையின் பொறுப்புக்களுடன் ஒத்திராத ஒரு முறையில் நடாத்தப்படுகின்றதோ அந்த இடப்பரப்புகளில் அல்லது அந்த மீன் கையிருப்புகள் தொடர்பாக நடாத்தப்படும்.

மீன்பிடித்தொழிற்பாடுகள் எனப் பொருள்படும்;";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8 ஆம் பக்கத்தில் 1 தொடக்கம் 17 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு கடற்றொழில் அமைச்சர் சார்பாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலுமொ திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"திருத்தப்பட்டவாறான சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என கடற்றொழில் அமைச்சர் சார்பாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமைய சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

9. **ஒத்திவைப்பு:** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்ற சபை முதல்வர் சார்பாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது..

அதன்படி பாராளுமன்றம், பி.ப. 5.19 பிரதிச் சபாநாயகரால் 2023 நவம்பர் 08 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.